**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.106/2024**

2025 ஆம் வருடம் ஜூன் மாதம் 10 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு . சந்தோஷ்குமார் (எ.ம.சா.1) | தொழில் | : உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பழனி. |
| த/பெ. | : திரு. ரவிச்சந்திரன் | வயது | : 32 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : பழனி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 10.06.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :-</u>

நான் பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலருக்காக நான் சாட்சியமளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திரா நகர் காலனி, நாயக்கர் தோட்டத்தை சேர்ந்த ஜெயபால் என்ற ஜெயராமன் மற்றும் மேற்கு கிரிவீதியைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் மாதவராஜ் ஆகியோருக்கு எங்கள் அலுவலகத்தில் இருந்து ஓட்டுனர் உரிமம் வழங்கப்படவில்லை என கணினி தேடல் செய்ததில் தெரியவந்துள்ளது. அது குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய சான்று எ.ம.சா.ஆ.1. அது குறித்த கணினி தேடல் பதிவுகள் எ.ம.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.3.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

சம்மனில் குறிப்பிடப்பட்டுள்ள ஜெயபால் என்ற ஜெயராமன், மாதவராஜ் ஆகியோருக்கு எங்கள் அலுவலகத்தில்தான் ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் அலுவலகம் அல்லாமல் வேறு அலுவலகம்,

**அல்லது வேறு மாநிலத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் அது பற்றி எங்களுக்கு தெரியாது.**

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.10 16:08:22 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**